பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 07 திங்கட்கிழமை 22.09.2025 கதிர் 316

## இனி இது ரகசியம் அல்ல!

ரெலோவின் மத்திய குழுக்கூட்டம் சனிக்கிழமை திருகோணமலையில் இடம்பெற இருக்கின்றது என்றும் ஆனால் அதில் முக்கியமான உறுப்பினர்கள் பலர் அதிருப்தி ☞2

## பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகளுக்கு பொதுப் போக்குவரது அனுமதி இனிமேல் கட்டாயம்

### டிசெம்பர் 31க்குள் பெறவேண்டும் என்கிறார் அமைச்சர்

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகள் டிசம்பர் 31 முடிவதற்குள் பொதுப் போக்குவரத்து அனுமதியைப் பெறுவது கட்டாயம் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாறைப் பகுதியில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனுமதிப்பத்திரத்திற்கான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. பொது போக்குவரத்து சாரதிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் அனுமதிப்பத்திரத்தைப் பெறவேண்டும்.பொது போக்குவரத்து சேவையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இப்போது சீட் பெல்ட் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சில பேருந்துகள் தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டபோதே சீட் பெல்ட்கள் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் பேருந்துகளை அலங்கரிக்க முடியும் என்றால், ஏன் சீட் பெல்டை பொருத்த முடியாது? இப்போது சில சாரதிகள் என்னையும் பொலிஸாரையும் ஏமாற்ற தங்கள் பிள்ளைகளது பாடசாலை பைகளின் பெல்ட்களை அணிந்து வருகின்றனர்.

அவ்வாறானவர்களிடம்50பயணிகளை ஒப்படைப்பது பொருத்தமானதல்ல. எனவே நாம் ஒரு முடிவை எடுத்துள்ளோம். எனவே பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் ஒவ்வொரு சாரதியும் பொதுப் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தைப் பெறுவது கட்டாயமாகும். நாங்கள் இதற்கான திட்டங்களை வகுத்துள்ளோம், எதிர்வரும் டிசெம்பர் 31க்குள் அவர்கள் நிச்சயமாக அந்த அனுமதிப் பத்திரத்தை பெறவேண்டும் என்றார்.

## இலங்கையில் இனி ஒற்றைக் கட்சி ஆட்சி என்ற எண்ணத்தோடு முன்னேறுகிறது ஆளும்தரப்பு

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

தற்போதைய ஆளும்தரப்பு மிகவும் திட்டமிட்ட வகையில் இந்நாட்டில் ஒற்றைக் கட்சி மட்டுமே ஆட்சியை நடத்தும் எண்ணத்தோடு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இறப்பு உதவிச் சங்கம், விவசாயிகள் சங்கம், மீனவர் சங்கம், இளைஞர் கழகம் முதல் வழிபாட்டிடங்களின் பரிபாலன சபை வரை அனைத்தையும் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் எடுக்க முயற்சித்து வருகின்றனர். சகல சமூக அமைப்புகளினதும் அதிகாரத்தை, கட்டுப்பாட்டை வலுக்கட்டாயமாக கைப்பற்ற முயற்சித்து வருகின்றனர். தற்போது சுயாதீன சிவில் பாதுகாப்புக் குழுவிற்கும் கூட அரசியல் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் இம்முறை ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் பாதுகாப்பிற்காக சிவில் பாதுகாப்பு குழுக்கள் நிறுவப்பட்டன. சகல கட்சிகளினது ☞2

## உடலில் மறைத்து வைத்து தங்க கடத்தல்: பெண் கைது

### பலாலி விமான நிலையத்தில் நேற்று சம்பவம்

இன்று யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக. உடல் பாகத்தினுள் மறைத்து வைதது தங்கத்தை கடத்திய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவரது உடம்பில் மறைத்து வைக்கப்பட்ட தங்கம் மீட்கப்பட்டது.

நேற்று மதியம் இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக கொழும்பை ☞2

## பதிலடிக்குத் தயாராகும் எதிர்க் கட்சிகள்

### அமைச்சர்களின் வருமான வரி விவரங்களை திரட்ட நடவடிக்கை

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களின் கீழ் எதிர்க்கட்சிகள் மீது தீவிரப் படுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகளை அடுத்து ஆளும் தரப்புக்குப் பதிலடி கொடுப்பதற்கு எதிர்க் கட்சிகளும் தயாராகி வருகின்றன. அரசுத் தலைவர், பிரதமர், அமைச்சர்களின் சொத்து விவரங்கள் வெளியாகி உள்ள நிலையில், அமைச்சர்களின் வருமான வரிக் கோப்புக்களைப் பெற்று உண்மைத் தன்மையை ஆராய்ந்து வெளிப் படுத்துவது என அவை தீர்மானித்துள்ளன.

சமகி ஜன பலவேகயா உள்ளிட்ட எதிர்க் ☞2

## அமெரிக்காவிற்கு இன்று பயணமாகிறார் அநுர

அரசுத் தலைவர் அநுரகுமார இன்று அமெரிக்காவிற்கு அரசமுறைப் பயணமாகச் செல்கிறார். ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80 ஆவது கூட்டத்தொடரில் செப்டெம்பர் 24 அரசுத் தலைவர் உரையாற்றவுள்ளார்.

இந்தப் பயணத்தில் அரசுத் தலைவருடன் வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தும் கலந்துக்கொள்ளவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தில் அமெரிக்க நேரப்படி பிற்பகல் 3.15 மணிக்கு (இலங்கை நேரப்படி நள்ளிரவு 12 மணியளவில்) அரசுத் தலைவர் அநுரகுமார உரையாற்றவுள்ளார்.

இந்தப் பயணத்தில் அரசுத் தலைவர், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மற்றும் பல உலகத் தலைவர்களுடன் இருதரப்புக் கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கப் பயணத்தை நிறைவு செய்த பின்னர் அரசுத் தலைவர் ஜப்பானின் ஒசாகா நகரிற்கும் ☞2

## எதிர்க் கட்சிகளின் இணைவு ஒரு குப்பை மேட்டுக்குச் சமம்

### எடுத்தெறிந்து பேசினார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

குப்பைமேட்டை போன்றதாகவே எதிர்க்கட்சிகளின் தற்போதைய ஒன்றிணைவு காணப்படுகிறது. நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி பக்கம் உள்ளார்கள். ஆகவே மக்கள் இனியொருபோதும் ஊழல்வாதிகளையும், நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களையும் ஆட்சிக்கு கொண்டு வரப் போவதில்லை என்று போக்குவரத்து,நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அம்பாறை பகுதியில் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் திருடர்கள், ஊழல்வாதிகள் என்று ஒருவரையொருவர் தூற்றிக்கொண்டவர்கள் இன்று ஒரே மேடையில் ஒன்றிணைந்துள்ளார்கள். அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக நாம் ஒருவரை ஒருவர் திருடர் என்று ☞2

## அதிக விலைக்கு அரிசி விற்றால் ரூ. 5 லட்சம் வரையில் அபராதம்

### நுகர்வோர் அதிகார சபை அறிவிப்பு

ஒரு தனிப்பட்ட வர்த்தகர் நிர்ணய விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசியை விற்றதாகக்கண்டறியப்பட்டால், அவருக்கு 100 000 முதல் 500,000 ரூபாய் வரை அபராதம் அல்லது 5 மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த வாரத்தில் மாத்திரம் அரிசி ☞2

## ஊழல்வாதிகளின் கைதால் அச்சமடைந்தே எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தோர் இணைவு

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல குற்றச்சாட்டு

ஊழல்வாதிகளைக் கைது செய்யும் போது அச்சமடைந்துள்ள எதிர்க்கட்சியினர் தற்போது ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்களின் உண்மை முகத்தைநாட்டுமக்கள்விளங்கிக்கொள்ளவேண்டும். எம்மீதுமுன்வைக்கப்படும்குற்றச்சாட்டுகளுக்குஎதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல ☞8

## கள்ள மண் ஏற்றிய உழவியந்திரம் மோதி கச்சாயில் குடும்பப் பெண் பரிதாபச் சாவு

### மற்றொருவரும் காயம்

யாழ். தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கச்சாய்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் ஒருவர்உயிரிழந்துள்ளதுடன்இளைஞர் ஒருவர் படு காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண் அவரது உறவு முறையான இளைஞர் ஒருவருடன் மோட்டார் சைகிளில் கச்சாய் வீதி ஊடாக கொடிகாமம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்தவேளைஅதே திசையில்சென்றஉழவியந்திரம் ☞2

## இனி இது .....

காரணமாக பங்குபற்றமாட்டார்கள் என்றும் இந்தப் பத்தியில் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

என்ன காரணமோ தெரியவில்லை கூட்டம் திருகோணமலையில் நடக்காது என்றும் அன்றைய தினம் மாலை 7.30 மணிக்கு 'சூம்' மெய்நிகர்வழியில் இடம்பெறும் என்றும் சனிக்கிழமை காலையில் திடீரென 'வட்ஸ்அப்' மூலம் அறிவிக்கப்பட்டது. நேரடியாகக் கூட்டத்தை நடத்தி அதில் பலர் கலந்துகொள்ளாமல்விட்டு தங்கள் கட்சியின் சீத்துவம் மக்களுக்குத் தெரியவந்துவிடும் என்று பயந்துவிட்டார்களோ என்னவோ தெரியாது, கூட்டத்தை நிகர்நிலையில் (ஒன்லைன்) மாற்றிவிட்டார்கள்.

அந்தக் கூட்டமும் பயனுள்ள வகையில் நடந்ததாகத் தெரியவில்லை. கூட்டம் முடிந்த பின்னர் என்னுடன் பேசிய ஒருவர் ''முட்டுக்குக் குடுத்த தடியெல்லாம் தூணாய் மாறியதால்தான் கட்சிக்கு இந்தச் சாபக்கேடு' என்று புலம்பினார். ரெலோவின் தலைவராக இருந்தவரான சிறீ சபாரத்தினத்திறக்கு கட்சிக்குள் போட்டி கிளம்பியபோது தனக்கு ஆபத்தில்லாத நபராகப் பார்த்து, தனக்குப் போட்டியாக்கிளம்பக்கூடியதிறமையற்றவராகப் பார்த்து இருத்தியவர்கள்தான் கட்சியை வழிநடத்துபவர்களாக மாறினால் இதுதான் நிலை என்பதே அவரது கூற்றுக்கான விளக்கம். அதாவது சிறீசபாரத்தினத்தின் பதவிக்கு முட்டுக்கொடுப்பதற்காக நிறுத்தப்பட்ட தடிதான் இப்போது கட்சியைத் தாங்கும் தூண் என்றாகிவிட்டதால் திறமையற்ற கட்சியைத் தாங்கும் பலமற்ற அந்தத் தடியால் கட்சி நாசமாகி விட்டது என்பதே அவரது புலம்பல்.

அதற்கொரு காரணத்தையும் அவர் சொன்னார். நடந்தது கட்சியின் மத்திய குழுக் கூட்டம். ஆனால், அதைத் தலைமை தாங்கி நடத்தவேண்டியவரோ நாக்குக் குழற என்ன பேசுகின்றோம் என்கிற மட்டு மரியதையே இன்றி மற்றைய உறுப்பினர்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டார். பதிலுக்கு உறுப்பினர்களும் அவரைக் கிழித்துத் தொங்கப்போட அவர்களுடன் சரிக்குச் சரியாக நின்று மல்லுக்கட்டுகிறார், இதுவா கட்சியை வழிநடத்தும் சீத்துவம் என்று அவர் கேள்வி எழுப்பினார். அவர் நிதானத்தோடு இருந்திருந்தாலாவது பறவாயில்லை என்பது அவரது ஆதங்கமாக இருந்தது.

மத்திய குழு உறுப்பினரான மட்டக்களப்பைச் சேர்ந்த பிரசன்னா திருகோணமலை கூட்டத்திற்குச் செல்லமாட்டார் என்று சனிக்கிழமை எனது பத்தியில் தெரிவித்திருந்தேன். ஆனால், அவர் 'சூம்' கூட்டத்தில் கலந்துகொண்டார். கலந்து கொண்டது மட்டுமல்ல அவருக்கும் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் இடையில் வாய்க்கால் வரப்புத் தகறாறுகளும் ஏற்பட்டது. கூட்டம் திசை மாறிச் செல்கிறது என்று மற்றைய பலர் அவ்வப்போது சுட்டிக்காட்டியபோதும் இருவரும் கருத்துக்களால் பொருதிக் கொண்டனர். கட்சியின் தேசிய அமைப்பாளர் பிரசன்னா. ஆனால், தனக்கு அறிவிக்காமல், தெரிவிக்காமல், ஆலோசிக்காமல் அண்மையில் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மட்டக்களப்புக்கு வந்திருந்தது குறித்து பிரசன்னா கேள்வி எழுப்பப் போய் இருவரும் கருத்துக்களால் நாகரீகமற்றுப் பொருத்திக் கொண்டார்கள் என்று சொல்லப்பட்டது. கூட்டம் முடிந்த பின்னர் செல்வத்தாரைத்தாறுமாறாகக்கிழிகிழியென்று கிழித்து விட்டேன் என்று பிரசன்னா தனக்கு நெருக்கமானவர்களிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறார். பதிலுக்கு செல்வமும் பிரசன்னா கட்சிநிதியைக்கையாண்டது குறித்து ஏதோ குற்றச்சாட்டுக்களைத் தெரிவிக்கப்போக, அந்தக் குற்றச்சாட்டை நேரடியாக விசாரி என்று பிரசன்னா சவால்விட பிரச்சினை பெரிதாகியிருக்கிறது. ஒரு வருடத்துக்கு முன்னர் திருகோணமலையில் நடந்த மத்திய குழுக் கூட்டத்திலும் இந்தக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டு, கட்சி ஒரு குழுவை நியமித்து இது குறித்து விசாரிக்கவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆனால், அதன் பின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் இருந்தால் 'சமர்ப்பி' என்று பிரசன்னா சவால் விட்டார். நிலமை கைமீறிப் போய் விட்டதால், மீண்டும் ஒரு விசாரணைக் குழு நியமிக்கலாம் என்று செல்வத்தார் சமாளிக்கப் பார்த்துள்ளார். இப்படி வாக்குவாதம் முற்றியதில், இடையே செல்வத்தாரைப் பார்த்து, 'நீங்கள் தலைவராக வந்த பின்னர் வடக்குகிழக்கில் ரெலோவின் பெயரால் அபிவிருத்திக்கான ஒரு செங்கல்லாவது நாட்டப்பட்டிருக்கின்றது என்று காட்டுங்கள் பார்க்கலாம்? 4 தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள், எங்காவது ரெலோவின் பெயரில் ஒரு செங்கல்லாவது நட்டப்பட்டிருக்கிறதா?' என்றெல்லாம் கேட்டிருக்கிறார் பிரசன்னா.

இதற்கு மத்தியில், முன்னாள் அரசுத் தலைவர்களான சந்திரிகா, மகிந்த, மைத்திரி, கோட்டாபய, ரணில் மற்றும் முன்னாள் அரசுத் தலைவர் பிரேமதாசவின் மனைவியான ஹேமா ஆகியோரின் சலுகைகளை நீக்கும் சட்டமூலத்தை ரெலோ ஏன் ஆதரிக்கவில்லை என்றும் செல்வம் அடைக்கலநாதனை ஒரு பிடிபிடித்தார் பிரசன்னா. தமிழர்களை போரில் அழித்தொழித்த சிங்களத் தலைவர்களின் சலுகைகள் பிடுங்கப்படுகையில் அதனை ஆதரிக்காது ஒதுங்கியது எதற்காக, வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதது எதற்காக என்று அவர் முகத்துக்கு நேராக எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் குழறல் பதில்களே வெளியாகியுள்ளன. கூட்டம் பற்றிய தகவல்களை எனக்குச் சொன்னவர், 'ரணிலிடம் வாங்கிய பணத்திற்கு இந்த விசுவாசத்தையாவது காட்டாவிட்டால் எப்படி?' என்றார்.

இந்தப் பிரச்சினை கொஞ்சம் அமர, அம்பாறை மாவட்ட அமைப்பாளர் ஹென்றி மகேந்திரனுக்கும் கட்சியின் செயலாளர் ஜனாவிற்கும் இடையில் பிரச்சினை தொடங்கியது. தனது மாவட்டத்திற்குள் தலையிட்டுகட்சியின்செயற்பாடுகளைக்குழப்புகிறார் என்று ஹென்றி குற்றஞ்சாட்டப்போக இந்தப் பிரச்சினை கிளம்பியது. விரைவில் இதுவும் கருத்து மோதலாக வெடித்தது. கட்சியின் செயலாளர் என்பதால் தனக்கு அதற்கெல்லாம் அதிகாரம் இருக்கின்றது என்ற அளவில் ஜனா சொல்லப்போக, அம்பாறையில் கட்சியைப் பாதுகாக்கத் தான் என்னவெல்லாம் செய்தார், அதை ஜனா எப்படியெல்லாம் கெடுத்தார் என்று ஹென்றி கதைக்கவென அதுவும் நேரத்தை கொன்று தீர்த்தது.

கடைசியில், வரவுள்ள மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்கென கூட்டப்பட்ட கூட்டம் உட்கட்சி மோதல்களால் அதிர்ந்ததுதான் மிச்சம். மாகாண சபை தேர்தல் தொடர்பில் கூட்டத்தில் நடந்த 'ஹைலைட்'என்னவென்றால், செல்வத்தாரைப் பார்த்து பிரசன்னா கேட்ட கேள்விதான். தொலைக்காட்சியில் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைகுறித்துக்கருத்துத்தெரிவிக்கிறீர்களே, முதலில்ரெலோவுக்குள் ஒற்றுமை இருக்கிறதா என்று நாக்கைப் புடுங்கிக் கொள்ளுமளவில் கேட்டார்.

அன்றுசனிக்கிழமைபகலில்தான்வவுனியாவில் செய்தியாளர்களிடம் பேசிய செல்வத்தார், மாகாண சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாகப் போட்டியிடவில்லை என்றால் என்பிபி மாதிரியான சிங்கள தேசியக் கட்சிகளிடம் எல்லாவற்றையும் இழந்துவிடுவோம் என்று தெரிவித்திருந்தார். அதைக் குறிப்பிட்டுத்தான் ''முதலில் ரெலோவுக்குள் ஒற்றுமை இருக்கிறதா' என்கிற கேள்வியை எழுப்பினார் பிரசன்னா. 'சொல்லுங்க தலைவரே! சொல்லுங்க!'

எனக்கென்னவோ விந்தனுக்கு அடுத்தபடியாக விரைவில் பிரசன்னாவிற்கும் ரெலோவில் சீட்டுக் கிழியும் என்று படுகிறது. அநியாயத்திற்கு இப்படித் தலைவரையே பதில் சொல்ல முடியாதபடிக்கு பட்டுப் பட்டென்று மூஞ்சையில் அடித்த மாதிரிக் கேள்வி கேட்டால் தனது அடிப்பொடிகளை வைத்துக்கொண்டு பிரசன்னாவை கட்சியைவிட்டுத் தூக்கி கடாசுவதைத் தவிர அவருக்கும் வேறு என்னதான் வழி உண்டு?

இதிலிருக்கும் மற்றொரு வேடிக்கை என்னவென்றால், தனது கட்சிக்குள் இவ்வளவு குழப்பங்களையும், குமுறல்களையும், பிரச்சினைகளையும்வைத்துக்கொண்டுதமிழ் அரசுக் கட்சி தன் உள்வீட்டுப் பிரச்சினையை முடித்துக்கொள்ள வேண்டும் என்று ரெலோ தலைவர் 'அட்வைஸ்' பண்ணுவதுதான். வீட்டுக்கு வீடு வாசல்படிதான் என்பதை உணரக்கூடிய நிதானத்தில்கூட அவர் இல்லைப் போலும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பதிலடிக்குத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள், உள்நாட்டு வருவாய்த் துறையிடமிருந்து அமைச்சர்களின் வருமான வரி கோப்புகளைப் பெற்று ஆய்வு செய்யவது என்று முடிவு செய்துள்ளன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்த வரிகோப்புகளைப்பெறஎதிர்க்கட்சிகளால் தனி குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களில் வழக்கறிஞர்களும் அடங்குகின்றனர்.

அதன்படி, அமைச்சர்கள்மற்றும்அவர்களது மனைவிகளின் அனைத்து வரி செலுத்தும் கோப்புகளையும் பெற எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கும் மேலதிகமாக தமது கட்சி தேர்தல் அமைப்பாளர்கள் மூலம் ஆளும்தரப்பு அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களின் குடும்ப உறுப்பினர்களின் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கவும் முடிவு செய்துள்ளன.

இதற்கிடையில், அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளைப் பெறுவதற்காக, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளால் ஏற்கனவே நூற்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் பெறப்படுவதால், ஆணையத்தின் அதிகாரிகள் அவற்றுக்கு பதிலளிப்பதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்என்றுதெரிவிக்கப்படுகிறது.

## கள்ள மண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டு சென்ற உழவு இயந்திரமே மோட்டார் சைக்கிள் மீது மோதியாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். விபத்தையடுத்து அந்த உழவு இயந்திரம் தப்பிச்சென்றுள்ளது.

சம்பவத்தில் கெடுற்பேலி மேடுற்கு மிருசுவிலைச்சேர்ந்தநந்தகுமார்ஜெயலக்சுமி என்ற 46 வயதுடைய குடும்பப் பெண் உயிரிழந்தார். அவரது உறவு முறையிலான 22 வயதுக் கனகலிங்கம் செந்தூரன் என்பவர் படுகாயமடைந்தார். அவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், அங்கிருந்து மேலதிக சிகைச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின்சடலம்சாவகச்சேரிஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து இதில் வேலை செய்தனர். இன்று சிவில் பாதுகாப்பு குழுவிற்கான நியமனப் பட்டியல்களை ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினர்களே நியமிக்கின்றனர்.

கிராமத்தில் நல்லதொரு அமைப்பு இருந்தால் இதுபோன்ற நியாயமற்ற நியமனங்களைத் தடுக்க முடியும். ஒவ்வொரு கட்சிக்கும் நியாயமான பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என்று கூறப்பட்ட இடத்தில் ஆளும்தரப்பின் சூட்சும முயற்சிகள் ஒரு கட்சி ஆட்சியைத் தோற்றுவிக்க முயல்கின்றன. எனினும் அந்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

நாம்அமைதியாகஇருந்தால், ஆளும்தரப்பு எல்லாவற்றையும் கைப்பற்றிவிடும். இந்த அடக்குமுறைத் திட்டத்திற்கு எதிராக நாம் ஒழுங்கிணைந்து அணிதிரளவேண்டும். அது நடந்தால், தற்போதைய ஆளும்தரப்பு எதிர்பார்க்கும் ஒற்றைக் கட்சி ஆட்சி என்ற எண்ணக்கருவை மக்களால் தோற்கடிக்க முடியும் - என்றார்.

## அதிக விலைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான 70 சுற்றிவளைப்புகளை நடத்தியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அரிசியின் விலை தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் அறிவித்துள்ளதாவது,

அதிகவிலைக்கு அரிசிவிற்பனைசெய்வது தொடர்பில் தொடர்பில் சுற்றிவளைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 55 சுற்றிவளைப்புகள் அரிசி விற்பனை தொடர்பிலும் ஏனைய 15 சுற்றிவளைப்புகள் களஞ்சியப்படுத்தல் சுற்றிவளைப்புகளும் அடங்கும்.

அரிசியை பதுக்கி வைத்தல், விலைகளை காட்சிப்படுத்தாமைமற்றும்நிபந்தனைகளுடன் அரிசியை விற்பனை செய்தல் போன்ற குற்றங்கள் அந்த சுற்றிவளைப்புகளில் அடங்கும்.

ஒரு தனிப்பட்ட வர்த்தகர் அதிக விலைக்கு அரிசியை விற்றதாகக் கண்டறியப்பட்டால், அவருக்கு 100,000 முதல் 500,000 ரூபாய் வரை அபராதம் அல்லது 5 மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

அதேவேளை ஒரு தனியார் நிறுவனம் குற்றவாளிஎனநீதிமன்றத்தில்நிரூபிக்கப்பட்டால் 5 இலட்சம் முதல் 50 இலட்சம் வரை அபராதம் விதிக்கலாம். அரிசி பதுக்கல் தொடர்பான குற்றத்திற்காக அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கலாம்.

இரண்டாவது தடவையாகவும் அதே குற்றத்தை புரிந்தால் அபராதம் இரட்டிப்பாகும் என்பதுடன் சிறை தண்டனை ஒருவருடமாக அதிகரிக்கப்படும் - என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது.

## அமெரிக்காவிற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்கிறார். அங்கு சிறப்பு கண்காட்சி 2025 இல் கலந்துகொள்வார். கலாசாரம், சுற்றுலா, வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவற்றில் நாட்டின் தனித்துவமான சலுகைகள் இக்கண்காட்சியில்காட்சிப்படுத்தப்படவுள்ளன.

## எதிர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமர்சித்துக்கொண்டோம் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார். இதனை மக்கள் கூர்ந்து அவதானிக்க வேண்டும்.

2024 ஆம் ஆண்டு அரசுத் தலைவர்த் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியவற்றில் தோல்வியடைந்தவர்கள், திருடர்கள் அனைவரும் ஒரு பக்கமாக ஒன்றிணைந்துள்ளார்கள். நாட்டுமக்கள்தேசிய மக்கள்சக்திதலைமையிலானஆளும்தரப்பின் பக்கம் ஒன்றிணைந்துள்ளார்கள்.

எதிர்வரும் காலப்பகுதியில் நடைபெறும் தேர்தல்களின்போதுதற்போதுஒன்றிணைந்துள்ள திருடர்கள்அனைவரையும்ஒருமித்தவகையில் தோற்கடிக்க முடியும். திருடர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மக்களின் அரசியல் தீர்மானத்தை இலகுப்படுத்தியுள்ளார்கள்.

மக்களின் பிரச்சினைகளுக்காகவா எதிர்க்கட்சியினர் ஒன்றிணைந்துள்ளார்கள். இல்லை, சட்டத்தில் இருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறுவது, எதிர்காலத்தில் தமது அரசியலை எவ்வாறு வலுப்படுத்திக்கொள்வது என்பதற்காகவே தற்போது ஒன்றிணைந்துள்ளார்கள். பழைய அரசியல் ஒருபோதும் வெற்றிப்பெறாது.

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவுக்கு அச்சமடையப் போவதுமில்லை, காலத்தை வீணடிக்கப் போவதுமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் ஒன்றிணைந்தவர்களிடமும் ஒருமித்த தன்மை இல்லை. தனக்கு அழைப்பு விடுக்கவில்லை என்று கடந்த காலங்களில் ரணிலுக்காக குரல் கொடுத்த சீலரத்ன தேரர் குற்றஞ்சாட்டி, மாநாட்டையும், அந்தக் கட்சியையும் கடுமையாகச் சாடியுள்ளார்.

குப்பைமேட்டை போன்றதாகவே எதிர்க்கட்சிகளின் தற்போதைய ஒன்றிணைவு காணப்படுகிறது. எதிர்க்கட்சியினர் எதிர்காலத்திலேனும் தேர்தலில் வெற்றிப்பெற வேண்டுமாயின் மக்களாணையை விளங்கிக்கொள்ளவேண்டும்.

நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி பக்கம் உள்ளார்கள். ஆகவே மக்கள் இனியொருபோதும் ஊழல்வாதிகளையும், நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களையும் ஆட்சிக்கு கொண்டு வர போவதில்லை - என்றார்.

## உடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த பெண் ஒருவர் வந்துள்ளார். அவரது தனது உடலில் தங்கத்தை மறைத்து வைத்துக் கொண்டு வந்தமை விமான நிலைய அதிகாரிகளிற்கு விசாரணையின்போது தெரியவந்தது

இதையடுத்து கடத்தலில் ஈடுபட்ட பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அங்கு சிகிச்சையின் பின் தங்கம் மீட்டு எடுக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்கப்பட்டதங்கத்தின்அளவுசந்தேகநபரின் மேலதிக விவரங்கள் வெளியிடப்படவில்லை.

# லஞ்ச ஆணைக்குழு தலைவருக்கு எதிரான முறைப்பாட்டில் எந்த உண்மையும் இல்லை

## ஆணைக்குழுவே விசாரித்து இப்படி அறிக்கை

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்கவின் மகன் கொழும்பு றோயல் கல்லூரிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட முறைமை குறித்து ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளது என இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பணிப்பாளர் நாயகத்தின் மகனை கொழும்பு றோயல் கல்லூரிக்கு இணைத்துக்கொள்வதற்கு முறையான வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன, அல்லது அரசியல் தலையீடுகள் ஏதும் இவ்விடயத்தில் இடம்பெறவில்லை என்பதை ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளதாம்.

இந்த முறைப்பாடு தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஆணைக்குழு அதில் தெரிவித்ததாவது:

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க 2014 ஆம் ஆண்டு முறைசாரா வகையில் தனது மகனை கொழும்பு றோயல் கல்லூரியில் சேர்த்துள்ளார்என்றுஆணைக்குழுவுக்குக்கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடு தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கட்டளையின் பிரகாரம் ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் 42(1) பிரிவின் பிரகாரம் தொடக்க கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு எதிராக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடு என்பதால், இந்த முறைப்பாட்டுக்கு முன்னுரிமையளித்து விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டன. இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் அதிகளவில் பேசப்படுகின்ற நிலையில், குறித்த விசாரணையின் முன்னேற்றத்தை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துகிறோம்.

குறித்த விசாரணையில் நீதிச்சேவை ஆணைக்குழு மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி ஆகிய தரப்புகளிடமிருந்து அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தியோகத்தர்களின் பிள்ளைகளை பாடசாலைக்கு இணைத்துக்கொள்வது தொடர்பில் றீள்ய்யூ 235/2011 ஆம் இலக்க உயர்நீதிமன்ற தீர்ப்புக்கமைய, கல்வி அமைச்சின் வழிகாட்டல்களுக்கமையவே குறித்த பிள்ளை பாடசாலைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தஆண்டுஇந்தப்பிள்ளைமாத்திரமல்லகல்விஅமைச்சின் வழிகாட்டலுக்கமைய நீதிமன்ற உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் பலர் கொழும்பு றோயல் கல்லூரியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இதற்கமைய இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் மகன் கொழும்பு றோயல் கல்லூரிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட வழிமுறையில் நிறுவனவழிமுறை முறையற்ற வகையில் பயன்படுத்தப்படவில்லை. அத்துடன் ஒருதலைபட்சமான செயற்பாடு, முறையற்ற செயற்பாடு அல்லது அரசியல் தலையீடுகள் ஏதும் இவ்விடயத்தில் இடம்பெறவில்லை என்பதை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்றுள்ளது.

# அநுரவின் ஓராண்டு நாளை பூர்த்தி

இலங்கையின் 09ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க அரசுத் தலைவராக அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்று நாளையுடன் (23) ஒருவருடம் பூர்த்தியாகிறது.

அரசுத் தலைவர் அநுரகுமார 2021.12.20 ஆம் திகதியன்று தேசிய மக்கள் சக்தியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு, 2024.09.21 அன்று நடைபெற்ற 08 ஆவது அரசுத் தலைவர் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் திசைகாட்டிச் சின்னத்தில் போட்டியிட்டார்.

அவர் 56 லட்சத்து 34 ஆயிரத்து 915 வாக்குகளைப் பெற்று 42,31 சதவீத வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ 43 லட்சத்து 63 ஆயிரத்து 35 வாக்குகளைப் பெற்று 32.76 சதவீத வாக்குகளையும், புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 2,299,767 வாக்குகளைப் பெற்று 17.27 சதவீத வாக்குகளையும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட நாமல் ராஜபக்ச 342,781 வாக்குகளைப் பெற்று 2.57 சதவீத வாக்குகளையும் முறையே பெற்றுக்கொண்டனர்.

இலங்கையின் அரசுத் தலைவர் தேர்தல் வரலாற்றில் கடந்த ஆண்டு நடைபெற்ற அரசுத் தலைவர்த் தேர்தலில்தான் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு அநுரகுமார அரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அரசுத் தலைவர் அநுரகுமார ஆட்சிக்கு வந்து ஆறு மாத காலத்துக்குள் வருமானம் மற்றும் அரச செலவுகளுக்கான பற்றாக்குறையை குறைத்துக் கொள்ளவதற்கு முன்னுரிமையளிக்கப்பட்டு இக்காலப்பகுதிக்குள் அரச வருமானம் 3221 பில்லியன் ரூபா வரையில் அதிகரித்ததாகச் சொல்லப்படுகிறது.

இக்காலப்பகுதியில் சுற்றுலாத்துறை விருத்தி மற்றும் சுங்க வருமானம் அதிகரிப்பு விசேடமானதாக கருதப்படுகிறது. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல் தனது ஆளும்தரப்பின் பிரதான இலக்கு என்று அரசுத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

நடப்பாண்டின் 08 மாதகாலத்துக்குள் சுற்றுலாத்துறை கைத்தொழிலில் 2290 மில்லியன் ரூபாய் வருமானம் திரட்டப்பட்டுள்ளதுடன்,அத்துடன் 2025 ஜூலை மாதம் வரையான காலப்பகுதியில் புதிதாக 40 அபிவிருத்தி கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் முதலீடாக 4,669 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஏற்றுமதி வருமானம் 10,000 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளதுடன்,சுங்க வருமானம் 1,271 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.அரச செயற்திட்டங்களை வலுப்படுத்தும் கொள்கைக்கமைய துறைமுக கண்காணிப்புக்கள் ஊடாக பெற்றுக்கொண்டுள்ள வருமானம் 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 66 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2025 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் மாத்திரம் 18 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டிக்கொண்டுள்ளதுடன், பல அபிவிருத்தி கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

மொழி சமவுரிமையை மேம்படுத்தல்,போதைப்பொருள் மற்றும் பாதாள குழுக்களின் செயற்பாடுகளை ஒழித்தல்,வடக்கு மற்றும் கிழக்கு மாகாண காணி விடுவிப்பு,வீதி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களுக்கு அரசுத் தலைவர்யின் ஒருவருட பதவி காலத்தில் முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது.

# இந்தியப் போர்க் கப்பல் சத்புர கொழும்பு துறைமுகத்துக்கு வருகை

## கடற்படை மரபுகளுக்கமைய வரவேற்பு

இந்தியப் கடற்படைக்குச் சொந்தமான போர்க் கப்பலான 'ஐஎன்எஸ் சத்புர' சனிக்கிழமை காலை விநியோகம் மற்றும் சேவைத் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக இலங்கையை வந்தடைந்தது. கடற்படை மரபுகளின் அடிப்படையில் இலங்கை கடற்படையினர் அக்கப்பலை கொழும்பு துறைமுகத்தில் வரவேற்றனர்.

இலங்கையை வந்தடைந்த பிரிகேட் (போர் கப்பல்) வகைக்குரிய 'ஐஎன்எஸ்சத்புர' என்ற இந்தக் கப்பல் 142.5 மீட்டர் நீளம் கொண்டதுடன்,403 பேரினை கொண்ட அங்கத்துவ குழுவினரைக் கொண்டுள்ளது.மேலும் இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரியாக கெப்டன் விகாஸ் கார்க் கடமையாற்றுகிறார்.

மேலும்,இந்த கப்பலின் அதிகாரிகள் மற்றும் அங்கத்துவர்கள் கொழும்பின் முக்கிய இடங்களை பார்வையிடவுள்ளனர்.

# போதைப் பொருள் கடத்தல் குறித்து மீனவர்களுக்கு கடற்படை விளக்கம்

போதைப்பொருள்கடத்தல்மற்றும்சட்டவிரோதமீன்பிடிநடவடிக்கைகளின் பாதகமான விளைவுகள் குறித்தும், தற்போதைய சட்டம் குறித்தும் மீனவர்களுக்கு கடற்படையினால் தெளிவுப்படுத்தப்பட்டது

போதைப்பொருள்கடத்தல்மற்றும்சட்டவிரோதமீன்பிடிநடவடிக்கைகளை எதிர்த்து போராடுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நீர்கொழும்பு பகுதியில் உள்ள மீனவ சமூகத்தினருக்கு சிறப்பு தெளிவுப்படுத்தல் நிகழ்வு கடந்த வாரம் அப்பகுதியில் உள்ள மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.

அதன்படி போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளின் பாதகமான விளைவுகள் குறித்தும்,தற்போதைய சட்டம் குறித்தும் மீனவர்களுக்கு இதன்போது தெளிவுப்படுத்தப்பட்டது.சட்டரீதியில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் கோரிக்கைகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த சிறப்பு நிகழ்வில் மேற்கு கடற்படை கட்டளைத் துணை தளபதி, நீர்கொழும்பு மீன்வள உதவி இயக்குநர், மேற்கு கடற்படை கட்டளையின் மூத்த அதிகாரிகள், மீன்வள ஆய்வாளர்கள் மற்றும் மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துக்கொண்டனர்.

# விமான நிலையக் கழிப்பறையிலிருந்து ரூ. 2 கோடி பெறுமதியான 'குஷ்' மீட்பு

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வருகை முனையத்தில் உள்ள ஆண்களுக்கான கழிப்பறையிலிருந்து ரூ.18.47 மில்லியனுக்கும் அதிக மதிப்புள்ள குஷ் மற்றும் ஹஷிஷ் போதைப்பொருள் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கழிப்பறைக்குள் சந்தேகத்திற்கிடமான பல பொதிகளைதூய்மைபணியாளர்ஒருவர்கவனித்து விமான நிலைய சுங்க, போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகளுக்கு தகவல் அளித்த நிலையில் அவை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டன.

சோதனையின் போது, பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 422 கிராம் குஷ் கஞ்சா மற்றும் 1.262 கிலோகிராம் ஹஷிஷ் போதைப்பொருள் ஆகியவற்றை விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கைப்பற்றினர்.




இந்நிலையில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் போதைப்பொருட்களை கொண்டு வந்தவர்கள், அவற்றை அந்த பகுதி வழியாக கடத்த முயற்சித்ததற்குப் பொறுப்பானவர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஐஸ், போதை மாத்திரைகளுடன் ஊரெழுவில் இளைஞன் கைது

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஊரெழுப்பு பகுதியில் நீண்ட நாட்களாக ஐஸ் பாவனையில் ஈடுபட்டு வந்த 27 வயது இளைஞன் பாவனைக்கு பயன்படுத்துப்பட்ட பொருட்களுடன் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 3.6 கிராம் ஐஸ் போதை மாத்திரைகள் அதனைப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகங்களையும் சான்று பொருட்களையும் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அநுரகுமார ஆட்சி – ஓராண்டு நிறைவு; வாக்குறுதிகளுக்கு என்னவாயிற்று?

இலங்கை அரசியல் வரலாற்றில் கடந்த ஆண்டு நிகழ்ந்த முக்கியமான திருப்பம் தேசிய மக்கள் சக்தி (NPP) சார்பில் அநுரகுமார திசாநாயக்க அரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை. நாட்டின் சீரழிந்த அரசியல் பண்பாட்டை மாற்றுவோம், ஊழலை முற்றிலும் ஒழிப்போம், புதிய அரசியலை உருவாக்குவோம் என்ற முழக்கங்களுடன் மக்கள் மத்தியில் தோன்றிய அவரது வெற்றி, கடந்த சில தசாப்தங்களாக நாட்டில் ஆழமாக வேரூன்றியிருந்த 'தண்டனையற்ற பண்பாட்டை' சவாலுக்குள்ளாக்கியதாகக் கருதப்பட்டது. இன்று, அவரது ஆட்சி ஓராண்டு நிறைவடையும் வேளையில், அவரது ஓராண்டு கால ஆட்சி பயனுள்ளதாக அமைந்ததா?

**ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள்**

அரசின் ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், இன்னும் 'பெரிய மீன்' எதுவும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்டதாக தேசிய மக்கள் சக்தித் தலைவர்கள் சொன்ன கோடிக்கணக்கான டொலர் பணம் மீண்டும் கொண்டுவரப்படவில்லை. அந்தப் பணத்தைக் கொண்டுவருவதற்கான தெளிவான நடவடிக்கைக்கான அறிகுறிகள்கூட இல்லை. ஊழலை ஒழிப்பதில் ஆளும்தரப்பிற்கு விருப்பம் இருந்தாலும், மக்கள் எதிர்பார்த்த உறுதியான முடிவுகள் எதுவும் வெளிப்படவில்லை.

**வெளிநாட்டு உறவுகள் – தளர்ச்சி**

மற்றொரு முக்கியமான குற்றச்சாட்டு அரசின் வெளிநாட்டு கொள்கை தொடர்பாகும். பிரிக்ஸ் (BRICS) மாநாடுகள், ஐ.நா. கடல்சார் மாநாடு, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு கூட்டங்கள் போன்ற சர்வதேச மேடைகளில் இலங்கையின் செயல்பாடுகள் மிகத் தாழ்வாகவே இருக்கின்றன என்கிற விமர்சனங்கள் உள்ளன. கடல்சார் வளங்களை ஆய்வு செய்யும் திட்டத்தில் தவறான முடிவுகள் எடுக்கப்பட்டதால், இலங்கை சர்வதேச நம்பிக்கையை இழந்தது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. முன்பு தடை செய்யப்பட்டிருந்த வெளிநாட்டு கடல் ஆய்வு கப்பல்களுக்கு அனுமதி வழங்குவோம் என்று அறிவித்தபோதும், அதற்கான தேசியக் கொள்கை ஒன்றை வகுக்காமல் காலம் தாழ்த்தியமை நாட்டின் வெளிநாட்டு நிலைப்பாட்டை பலவீனப்படுத்தியுள்ளது. தற்போது, சீனாவின் 'யுவான் வாங் – 5''' செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பல் மீண்டும் இந்துப் பெருங்கடலில் நடமாடத் தொடங்கியிருப்பது இலங்கை வெளிநாட்டு கொள்கை சோதனையைச் சந்திக்க நேரிடும் என்ற அச்சத்தைக் கிளப்பியுள்ளது.

**அரசியல் சீர்திருத்தங்கள் – நிழலில்**

நிறைவேற்று அரசுத் தலைவர் முறைமையை ஒழிக்க புதிய அரசமைப்பைக் கொண்டுவருவோம் என்ற வாக்குறுதி இன்னும் நிறைவேறப்படவில்லை. நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் (நுஐயிஷ்ஐள நீழிகூஷீளமிதீ புஉமி) திருத்தப்படும் என கூறப்பட்டபோதும், அதற்கான முன்னேற்றம் மந்தமாகவே உள்ளது. பயங்கரவாத தடுப்பு சட்டம் (PTA) நீக்கப்படும் என்ற வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. அதில் சில முன்னேற்றங்கள் தெரிந்தாலும், முழுமையான முடிவு இன்னும் இல்லை. மக்கள் விருப்பப்படும் நேரத்தில் தங்கள் பிரதிநிதிகளை மீண்டும் திரும்பப் பெறும் சட்டத்தைக் கொண்டுவருவோம் என்ற உறுதிமொழி முற்றிலும் மறக்கப்பட்டுவிட்டது. அதேபோல், 2019ஆம் ஆண்டின் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அரசுத் தலைவர் விசாரணைக் குழுவின் பரிந்துரைகளும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**பொருளாதார நிலை – வளர்ச்சியின்றி நிலைத்தன்மை**

சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களைப் பின்பற்றி, பொருளாதார நிலைத்தன்மையை பேண ஆளும்தரப்பு முயன்றுள்ளது. அதற்காகப் பாராட்டுக்கள் தேவைப்படுகின்றன. ஆனால் நிலைத்தன்மை என்பது வளர்ச்சியாக மாறவில்லை. பொதுமக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றம் எதுவும் இல்லை. குடும்பச் செலவுகள், அடிப்படை உணவுப் பாதுகாப்பு போன்ற துறைகளில் இன்னும் பெரும் அழுத்தம் நிலவுகிறது.

**அரசியல் நம்பிக்கை குறைவடைவது**

அரசுக்கு மக்கள் அளித்த பெரும் ஆதரவு, இன்று சீராகக் குறைந்து வருகிறது. குறிப்பாக, சில NPP தலைவர்கள் குறுகிய காலத்திலேயே பெரும் செல்வந்தர்களாக மாறினர் என்று வரும் குற்றச்சாட்டுகள், அதனை உதாசீனம் செய்யும் ஆளும்தரப்பின் நிலைப்பாடு, மக்களின் பொறுமையைத் தளர்த்தியுள்ளது. அரசுத் தலைவர் அநுரகுமார மற்றும் அவரது கட்சி மீது மக்கள் வைத்திருந்த எதிர்பார்ப்புகள், நாளுக்கு நாள் குறைந்து வருகின்றன.

**தமிழ் மக்களின் கோபம்**

உறுதியளிக்கப்பட்டபடி மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை, அரச படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்கள் விடுவிக்கப்படவில்லை, வடக்கு கிழக்கில் இருந்து படையினரின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை, காணாமற்போனவர்களின் உறவுகளின் தேடல்களுக்குப் பதிலளிக்கப்படவில்லை, போர்க் குற்றங்களுக்கான பான்னாட்டு நீதிக்கான தமிழர்களின் கோரிக்கை நிராகரிப்பு, உள்ளூர் பொறிமுறை ஊடாக நீதி என்று கூறப்பட்டாலும் அதற்கான ஒரு அடிகூட எடுத்து வைக்கப்படவில்லை, தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் எவையும் விசாரணைக்கு உட்படுத்தப்படாத நிலமை, தமிழ் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து எந்த விசாரணைகளும் தொடங்கப்படாத நிலை, பௌத்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான எந்தவித நடவடிக்கைகளும் இல்லாதது மட்டுமல்ல தையிட்டி விகாரை போன்ற சர்ச்சைக்குரிய இடங்களில் சட்டத்துக்கு மாறாக பௌத்த ஆதரவு நிலைப்பாடு, அரசியல் கைதிகளின் விடுதலையில் எந்த நடவடிக்கையும் இல்லாமை, எல்லைப்புற குடியேற்றங்களைக் கட்டுப்படுத்தத் தவறுவதுமட்டுமன்றி அவற்றை ஊக்குவிக்கும் செயற்பாடுகளைக் கண்டும் காணாமல் இருப்பது, தமிழ் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான எத்தனங்களுக்குப் பதில் அவற்றிலிருந்து நழுவிப் போகும் போக்கு, புதிய அரசமைப்புக்கான நகர்வுகளைத் தாமதப்படுத்துவது, ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்களை எதிர்ப்பது, தமிழர் பகுதிகளில் குறிப்பிடத்தகுந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் எவற்றையும் எடுப்பதற்கான முன்முனைப்புக்கள் இன்றி இருப்பது, மன்னார் காற்றாலை போன்ற மக்களின் வெறுப்புக்குரிய திட்டங்களைச் செயற்படுத்த முனைவது என்று இந்த ஆளும் தரப்பின் போக்கால் தமிழர்கள் முற்றிலுமாக நம்பிக்கையிழந்து கோபமடைந்திருக்கிறார்கள். உள்ளூராட்சி சபைத் தேர்தலிலேயே இது தொடர்பான தமது உணர்வுகளையும் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். அதன் பின்னர். இன்னமும் நிலமை மோசமாகி இருக்கிறது. ஆளும்தரப்பின் கோபம் வெறுப்பாக மாறும் நிலையை எட்டியிருக்கிறது.

**தீர்க்கமான சிந்தனை அவசியம்**

இதனால், ஒரு ஆண்டு நிறைவின் இந்தத் தருணத்தில், தேசிய மக்கள் சக்தி ஆட்சி தங்கள் அரசியல் வாக்குறுதிகளை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு, ஊழல் ஒழிப்பு, புதிய அரசமைப்பு, வெளிநாட்டுக் கொள்கை உறுதிப்பாடு, பொருளாதார வளர்ச்சி போன்ற துறைகளில் விரைவான முடிவுகளை எடுக்காவிடில், மக்கள் நம்பிக்கை மேலும் சிதைவடையும் அபாயம் உள்ளது.

அரசு இன்னமும் நேரத்தை இழக்காமல், ஆட்சிப் பொறுப்பை முழுமையாக உணர்ந்து, செயற்பாடுகளில் உறுதியை வெளிப்படுத்தவேண்டும். இல்லையேல், ஓராண்டுக்கு முன்பு பெற்ற அதிசய வெற்றி, விரைவில் அரசியல் தோல்வியாக மாறும் ஆபத்து தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

## அம்பாறை மாவட்ட வைத்தியசாலையின் மேம்பாட்டுக்கா ரூ. 1,300 மில். ஒதுக்கீடு

அண்மையில் நிர்மாண பணிகளை பூர்த்தி செய்த அம்பாறை மாவட்ட வைத்தியசாலையின் மேம்பாட்டுத் திட்டங்கள் இரண்டுக்காக 1304 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அடுத்தக்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த திட்டங்களை நிர்ணயித்த காலத்துக்குள் முடிக்காவிடின் திட்ட மதிப்பீட்டைவிட இரண்டு மடங்கு நிதிச்செலவை ஏற்க நேரிடும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

சுகாதார மற்றும் வெகுமக்கள் ஊடக அமைச்சின், ஆரோக்கியமான இலங்கையை உருவாக்குவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக, கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்ட மருத்துவமனையின் வசதிகள் மற்றும் பௌதீக நிலையை மேம்படுத்தும் திட்டத்தை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அண்மையில் தொடக்கி வைத்தார்.

அதன்படி கடந்த காலங்களில் அம்பாறை மாவட்ட மருத்துவமனையில் தொடங்கப்பட்டு முடிக்கப்படாத பல மேம்பாட்டுத் திட்டங்கள் சுகாதார அமைச்சரின் வழிபாட்டுதல் மற்றும் தலைமைத்துவத்தின் கீழ் நிதி ஒதுக்கி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

அதன்படி 950 மில்லியன் ரூபாய் செலவில் அவசர மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவின் கட்டுமானப் பணிகளும், 3543 மில்லியன் ரூபாய் செலவில் வடிகுழாய் ஆய்வக அலகு வளாகத்தின் கட்டுமானப் பணிகளும் சுகாதார மற்றும் வெகுமக்கள் அமைச்சரால் பார்வையிடப்பட்டன.

இந்த திட்டங்களை 2026 ஆம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் அம்பாறை மாவட்;ட வைத்தியசாலையின் வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தையும், மருத்துவமனையின் உள்ளகசாலை அமைப்பை நிர்மாணிக்கும் திட்டத்தையும் சுகாதார அமைச்சர் தொடக்கி வைத்தார்.

மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகளுடன் புதிதாகக் பெற்றுக்கொள்ளப்பட்ட அம்புலன்ஸ் மற்றும் நடமாடும் ஆய்வக வாகனத்தையும் சுகாதார அமைச்சர் அம்பாறை மாவட்ட வைத்தியசாலைக்கு உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்ட வைத்தியசாலை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 8 லட்சம் மக்களுக்கும், ஏனைய பகுதியின் மக்களுக்கும் சுகாதார சேவைகளை வழங்குகிறது. எனவே வைத்தியசாலையை உயர் மட்டத்துக்கு மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி கடந்த காலங்களில் தொடங்கப்பட்டு முடிக்கப்படாத பேரிடர் மேலாண்மை பிரிவு மற்றும் வினையூக்க ஆய்வக அலகு ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் முடிக்கப்படும். அவசர மேலாண்மை பிரிவு, மூன்று அலகுகளின் கட்டுமானப் பணிகள் குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வினையூக்க ஆய்வக அலகு வளாகத் திட்டம் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு 354 மில்லியன் ரூபாய் செலவில் முடிக்கப்பட வேண்டும் என்றும் ஆனால் பணிகளை மீண்டும் தொடங்குவதன் மூலம் திட்டத்தை முடிக்க ஆளும்தரப்பு 720 மில்லியன் ரூபாவை செலவழிக்க வேண்டியிருக்கும். மக்களுக்கு வினைத்திறனான சுகாதார சேவையை வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## அறிக்கை இந்த வாரம்

தங்காலை நெடோல்பிட்டியவில் காணியொன்றில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் குறித்த சோதனை அறிக்கையை இவ்வாரம் பொலிஸாரிடம் கையளிக்க எதிர்பார்த்துள்ளதாக தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட பாதாளக் குழுக்களினரால் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில், மித்தெனிய பகுதியில் காணியொன்றில் இருந்து ஐஸ் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரசாயனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து, தங்காலை நெடோல்பிட்டிய பகுதியிலும் கந்தானை பகுதியிலும் இதேபோன்ற பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அந்தப் பொருட்களின் மாதிரிகள் சோதனைக்காக தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை மற்றும் அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களதிடமும் ஒப்படைக்கப்பட்டன.

அதன்படி, மித்தெனிய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களில் மெத்தம்பேட்டமைன் என்ற ஐஸ் இருப்பதை தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டு சபை மற்றும் அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களமும் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளன.

சம்பந்தப்பட்ட இடத்திலிருந்து எடுக்கப்பட்ட 20 மாதிரிகளில் 17 மாதிரிகளில் மெத்தம்பேட்டமைன் இரசாயனங்கள் இருப்பதாகத் தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டு சபை வழங்கிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தங்காலை நெடோல்பிட்டிய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களின் சோதனை அறிக்கையை இவ்வாரத்திற்குள் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கந்தானை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களின் சோதனை அறிக்கையை விரைவில் வெளியிட எதிர்பார்ப்பதாகவும் தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டு சபை மேலும் தெரிவித்துள்ளது.

## மருந்துத் தட்டுப்பாட்டுக்கு நிதி அல்ல கொள்முதல் சிக்கல்களே காரணமாம்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டுக்கு நிதிப் பிரச்சினை காரணமல்ல, கொள்முதலில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளன. வெளிப்படையான நடவடிக்கைகள் ஊடாக இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அம்பாறை பகுதியில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான கொள்முதல் செயல்முறைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன அதன்படி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகள் நவம்பர் மாதத்திற்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும். ஆகவே மருந்து விநியோகத்தில் பெரும் நெருக்கடி இக்காலப்பகுதியில் ஏற்படாது.

சில மருந்துகள் தனியார் சந்தையில் கிடைக்காது, திறந்த வெளியில் கிடைக்காது, மருந்தகங்களிலும் கிடைக்காது. இதுபோன்ற பல சிக்கல்கள் உள்ளன. மருந்துப் பதிவின்போது வரம்பற்ற விலைகளைச் சமர்ப்பிப்பவர்களின் பதிவை நாங்கள் அனுமதிப்பதில்லை. தெற்காசிய நாடுகளின் தற்போதைய சந்தை நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட விலை வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதை விரும்பாதவர்கள் மருந்துகளை விநியோகிக்கமாட்டார்கள். கேள்வி கோரலுக்கான பொறுப்பை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடம் வழங்கியுள்ளோம். சுமார் 80 முதல் -85ல் % வரையான பணி அதில் நிறைவு பெற்றுள்ளது. நாம் ஏற்கனவே கொள்வனவு செய்த மருந்துகள் எதிர்வரும் ஓரிரு மாதத்துக்குள் பெற்றுக்கொள்ளப்படும் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# இன்று மகிமை பொருந்திய நவராத்திரி விரதம் ஆரம்பம்..

நவராத்திரிபண்டிகைபுரட்டாசிஅமாவாசை முடிந்து பிரதமை தொடங்கி தசமி வரை கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

மாசி மாதத்தில் சிவனுக்கு சிவராத்திரி கொண்டாடுவது போல புரட்டாசியில் ஒன்பது நாட்கள் சக்தியை வழிபட நவராத்திரி பண்டிகை கொண்டாடுகிறோம்.

இந்த ஆண்டுசெப்டம்பர் 22ஆம் தேதி இன்று திங்கட்கிழமை நவராத்திரி தொடங்குகிறது. எதிர்வரும் அக்டோபர் 2 ஆம் திகதி விஜய தசமியுடன் நவராத்திரி விழா நிறைவடைகிறது.

பிரதமை தொடங்கி தசமி வரை ஒன்பது இரவுகள் அம்பிகையை அலங்கரித்து சிறப்பாக வணங்குவதன் மூலம் செல்வ வளம் பெருகும் என்பது ஐதீகம்.

உலகத்தின் இயக்கத்திற்கு எல்லாம் சக்தி தான் ஆதாரம்.அந்த சக்தியை வழிபடுவதே நவராத்திரிதிருவிழா. அம்மனை வழிபட்டால் அனைத்து ஆற்றலையும் பெறலாம். சக்தி இல்லை என்றால் இந்த உலகம் இயங்காது. அந்த சக்தியை வழிபடுவதற்காக உருவானதுதான் நவராத்திரி பண்டிகை.



நவராத்திரி பண்டிகையின் ஒன்பது நாட்களும் ஒன்பது வகையான அலங்காரம் செய்து வழிபடுவது வழக்கம். ஒவ்வொரு அம்மன் ஆலயத்திலும் அம்மனுக்கு தினசரி ஒவ்வொரு வடிவத்தில் அலங்காரம் செய்யப்பட்டுக் கொண்டாடப்படுகிறது.

அம்மனை சக்தி வடிவமாக இச்சா, கிரியா, ஞானசக்திஎனமூன்றுசக்திகளாக வழிபடுகின்றோம். வாழ்க்கையில் கல்வி செல்வம் வீரம் ஆகிய மூன்றும் முக்கியம். மூன்றும் கலைமகள், அலைமகள், மலைமகள் என மூன்று சக்திகளை வழிபடுகின்றோம்.

வாழ்க்கையில் மூன்றும் முக்கியம். வீரத்திற்கு மூன்று நாட்கள், செல்வத்திற்கு மூன்று நாட்கள், கல்விக்கு மூன்று நாட்கள் ஒதுக்கி ஒன்பது நாட்கள் வழிபடுகின்றோம். இதன் மூலம் நமக்கு சக்தி கிடைக்கும் அந்த சக்தியை நாம் நல்ல விசயத்திற்காக பயன்படுத்த வேண்டும்.

பிரதமை நவராத்திரியின் முதல் நாளில்தேவியானமகேஸ்வரிபாலா, மது கைடபர் அழிவுக்குக் காரணமான தேவி. இன்றைய தினம் மல்லிகை, வில்வம் கொண்டுஅலங்கரிக்கவேண்டும். வெண் பொங்கல் நைவேத்தியம் செய்யலாம்.

துவிதியை இரண்டாம் நாள் தேவி கவுமாரி தேவியாக போற்றப்படுகிறாள். அவளே ராஜ ராஜேஸ்வரியாகவும் ஆராதிக்கப்படுகிறாள். முல்லை, துளசியால் அலங்காரம் செய்து புளியோதரை நிவேதனம் பண்ண வேண்டும்.

திரிதியைமூன்றாவதுநாளுக்குஉரிய வாராகி அன்னை, கன்யா கல்யாணி என்று அழைக்கப்படுகிறாள். செண்பகம் மற்றும் சம்பங்கிகள் இவளுக்கு உகந்தவை. சர்க்கரை பொங்கல் படைத்து வழிபட வேண்டும்.

சதுர்த்திநான்காம்நாளில்அருள்பவள் மகாலட்சுமி. இவள் ரோகிணி என்று அழைக்கப்படுகிறாள். மல்லிகை பூக்களால் அலங்காரம் செய்து, அன்னம் நைவேத்தியம்செய்துவழிபடவேண்டும்.

பஞ்சமிஐந்தாம்நாளில்அன்னையை வைஷ்ணவியாகவும் மோகினியாகவும் அலங்கரிப்பர். முல்லைப்பூ அலங்காரமும் தயிர் சாதமும் இவளுக்கு ஏற்றவை.

சஷ்டி ஆறாவது நாளுக்குரிய தேவி வடிவம் இந்திராணி. சர்ப ராஜ ஆசனத்தில் தேவி அமர்ந்திருக்கும் கோலத்தில் பூஜை செய்வது வழக்கம். தேவிக்கு ஜாதி மலரே உகந்தது. தேங்காய் சாதம் படைத்து வணங்கலாம்.

சப்தமி ஏழாம் நாளில் தேவி மகாசரஸ்வதி, சுமங்கலி என அழைக்கப்படுகிறாள். இந்த அன்னைக்கு தாழம்பூ சூடி, தும்பை இலைகளால் அர்ச்சனை செய்ய வேண்டும். எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து வழிபடலாம்.

அஷ்டமி எட்டாவது நாளில் தேவியானவள் நரசிம்மிதருமி. நரசிம்மி வடிவின் சினம் தணிந்த கோலம் இது. இந்த நாளில் அன்னை அன்பே உருவாக அருள்பாலிக்கிறாள். இவளுக்கு உகந்த ரோஜா மலரை சூடி, சர்க்கரை பொங்கல் படையல் இட்டு வழிபடலாம்.

நவமி ஒன்பதாம் நாளில் அம்பிகை, சாமுண்டி மாதா, அம்பு, அங்குசம் தரித்த லலிதா பரமேஸ்வரியாக அன்னையை வழிபடுவது வழக்கம். இன்றைய தினம் பால் பாயாசம் நைவேத்தியம் செய்து வழிபடலாம். தாமரை மலர்களால் அலங்கரித்து

விஜயதசமி பத்தாவது நாள் விஜய தசமி. விஜயம் என்றாலே வெற்றி! தீயவை அழிந்து நன்மை பெருகும். நாம் தொடங்கும் காரியம் வெற்றி பெறும் என்பதற்காகவே விஜயதசமி கொண்டாடப்படுகிறது.

நவராத்திரியின்போது துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் பூஜிப்பவர்களுக்கு எதிலும் நலம்பெறும் வகையில் வெற்றி கிடைக்கும்.

விரத பலன் நவராத்திரி விழாவின் ஒவ்வொரு நாளும் சிறப்பு என்றாலும் அதில் விசேஷமான நாட்கள் கடைசி மூன்று நாட்கள். சக்தியற்றவர்களாக இருப்போர் நவராத்திரி விரதத்தில் பூஜை செய்வதற்கு மிகவும் முக்கியமான நாட்கள் சப்தமி, அஷ்டமி, நவமி தினங்களாகும். இந்த மூன்று நாட்களும் விரதத்தோடு பூஜித்தால் ஒன்பது நாட்கள் பூஜித்த பலன் கிடைக்கும். நவராத்திரி விரதம் இருப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நல்ல பயன் அடைவார்கள். இந்த ஆண்டு கண்ணுக்கு தெரியாத அரக்கன் கொரோனா ஒழிய அம்பிகை அருள் புரிய வேண்டும் என்று அனைவரும் வேண்டிக்கொள்வோம்.

### நவராத்திரி கொலு

நவாத்திரி பொம்மைகளைச் செய்ய, ஒரே கழிமண் மூலப்பொருளாகிறது. ஆனால் கிருஷ்ணராகவும், ராமராகவும், முருகனாகவும், சிவனாகவும், அம்பாளாகவும் பல பொம்மைகள் ஒரே மண்ணில் உருவாகிறது. பரப்பிரமம் பலவகை வடிவங்களை எடுத்து நம்மைக் கரையேற்றுவதை நவராத்திரிக் கொலு உணர்த்துகிறது.

**வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா**
**காரைதீவு**

## திக்கெட்டும் நிறைந்தாய் துர்க்கையம்மா நீயே!



**ஈரமுடை நெஞ்சை ஈந்திடுவாய் தாயே**
**இணையில்லா திருவடியைப் பற்றுகிறோம் தாயே**
**கோரமுடை நினைப்பைக் கொன்றொழிப்பாய் தாயே**
**குவலயதில் வாழத் துணைநீயே தாயே**

**ஆணவமாம் நினைப்பை அகற்றிவிடு தாயே**
**அகந்தை அகமேறா ஆக்கிவிடு தாயே**
**தீமையெமை அணுகா திருப்பிவிடு தாயே**
**திக்கெட்டும் நிறைந்தாய் துர்க்கையம்மா நீயே**

**சோர்வடையும் எண்ணம் துடைத்தெறிவாய் தாயே**
**தொலைநோக்குப் பார்வை கொடுத்தருள்வாய் தாயே**
**வாய்மையுடன் வாழ வரமருள்வாய் தாயே**
**மாநிலத்தில் எமக்குத் துணைநீயே தாயே**

**அச்சமதை அகற்ற அருகணைவாய் அம்மா**
**ஐயநிலை போக்க அருள்புரிவாய் அம்மா**
**இச்சைகொண்டு உன்னை இறைஞ்சுகிறோம் அம்மா**
**இவ்வுலகில் எம்மைக் காத்திடுவாய் அம்மா**



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண்- ஆஸ்திரேலியா**

காலைக்கதிர் Kalaikkathir

காசாவை முழுமையாகக் கைப்பற்றும் பிரதமர் நேதன்யாகுவின் திட்டத்திற்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இஸ்ரேல் ராணுவத்திற்கு காசாவை கைப்பற்ற நேதன்யாகு தற்போது உத்தரவிட்டுள்ளார்.



### காசாவில் தொடர் பட்டினி:

காசாவில் பட்டினியால் இறந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்துள்ளது. காசாவில் பசியில் கதறும் குழந்தைகள் மீது சர்வதேச ஊடகங்களின் கரிசனம் இருக்க, ஊடகப் பார்வையை மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகப் பார்வையையும் இஸ்ரேலின் பக்கம் திருப்பும் விதமாக, ஒரு வரலாற்றின் கொடூர ஆக்கிரமிப்பு முடிவை நெதன்யாகு அரசு வெளியிட்டுள்ளது.


இதுவரை போரில் தரைமட்டமாக்கியதெல்லாம் போதும், இனி முழுமையாக காசாவை கைப்பற்றிவிடலாம் என்பதை நோக்கி அவர் நகர்ந்து வருவதை உறுதிப்படுத்தும் விதமாகவே, இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு இந்த முடிவை எடுத்துள்ளது.

அப்பாவி பொதுமக்களை ஏன் பட்டினியில் தள்ளுகிறீர்கள், உணவு நிவாரணப் பொருட்களைத் தடுக்கும் இஸ்ரேலை மனிதம் உள்ள மனிதர்கள் கேள்வி கேட்கும் சூழலில்,

# வரலாற்றின் கொடூர ஆக்கிரமிப்பு!
# காசாவை கைப்பற்றும் திட்டம்;

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

காசாவில் பஞ்சமும், பட்டினியும் தலைவிரித்தாடப் போகிறது என்று ஐ.நா. அமைப்புகள் எச்சரிக்கும் வேளையில், காசாவை முழுமையாக கைப்பற்றுவதாக நெதன்யாகு தெரிவித்துள்ளமைக்கு உலகளாவிய கண்டனம் எழுந்துள்ளது.




### முதலில் காசாவை 1967இல் கைப்பற்றிய இஸ்ரேல்:

காசாவை முதன்முதலில் இஸ்ரேல் 1967ஆண்டு ஆறு நாள் போரில் கைப்பற்றியது. இதற்காக சிரியா, ஜோர்டான், எகிப்து மீது இஸ்ரேல் ஆறு நாட்கள் போர் நடத்தியது. ஜூன் 5, 1967-ல் அப்போதைய இஸ்ரேலிய ராணுவத் தலைவர் இஷாயாகு காவிஷ், காசாவை கைப்பற்றினார். அதுவரை அந்தப் பகுதி எகிப்து கட்டுப்பாட்டில் இருந்தது.

ஆனாலும் ராணுவத்தளதியின் உத்தரவை அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் மோஷே டயான் எதிர்த்தார். இலட்சக்கணக்கான பாலஸ்தீனியர்களுடன் சர்ச்சைக்குரிய பகுதியைக் கைப்பற்றுவது, ‘குளவிக் கூட்டுக்குள் சிக்குவது போன்றது’ என்றும் விமர்சித்திருந்தார். ஆனால், ராணுவம் முன்னேறி எகிப்திடமிருந்து காசாவை கைப்பற்றியது. பாலஸ்தீன மக்கள் உள்ள பகுதிகளில் ராணுவ நிலைகளை அமைத்து அங்கே யூதர்களை குடியமர்த்தியது. இது பாலஸ்தீன மக்கள் ஒரே இடத்தில் அடர்த்தியாக பலமாக இருப்பதைத் தடுக்கும் உத்தியாக இஸ்ரேல் கையாண்டது.

1970இல் இஸ்ரேலில் ஆட்சியில் இருந்த தொழிலாளர் கட்சி, அங்கே ‘நஹால்’ குடியேற்றங்களை அமைத்தது. நஹால் என்பது இஸ்ரேலியப் படைப்பிரிவின் பெயர். அதையொட்டி இஸ்ரேல் காசா ஆக்கிரமிப்புப் பகுதியில் நஹால் குடியேற்றங்களை உருவாக்கியது. அங்கே குடியமர்த்தப்பட்ட மக்கள் விவசாயத்தை பிரதானமான தொழிலாகக் கொண்டிருந்தாலும் கூட ராணுவத் திறன் பெற்றவர்களாகவும் இருந்தனர்.

2005இல் காசா பகுதியில் இதேபோல் 21 குடியேற்றங்கள் உருவாகின. மொத்தம் 8600 பேர் இருந்தனர். கிட்டத்தட்ட 13 லட்சம் பாலஸ்தீனியர்களுக்கு இடையே இந்த 8100 பேர் ஆங்காங்கே குடியேறியிருந்தனர். பாலஸ்தீன அகதிகள் முகாம்கள் நிரம்பி வழிந்து கொண்டிருக்க, அத்தியாவசியத் தேவைகள் கூட பூர்த்தியாகாமல் திணறிக் கொண்டிருக்க, அதன் பார்வையிலேயே இஸ்ரேல் ராணுவ உதவியுடன், பாதுகாப்புடன் இஸ்ரேலின் நஹால் குடியேற்றங்கள் பசுமையாக, வளமாக மாறுவது பாலஸ்தீன மக்களை, போராளிகளை கொதிப்படையச் செய்தது.

இதன் விளைவாக 2000இல் போராட்டமாக வெடித்தது. இதனால் இஸ்ரேல் தனது குடியேற்றக் கொள்கையை மறு ஆய்வுக்கு உட்படுத்தியது. இஸ்ரேல் ராணுவத்துக்கும், பாலஸ்தீன மக்களுக்கும் இடையேயான மோதலைத் தடுக்க குடியேற்றத்தை அப்புறப்படுத்தத் தொடங்கியது.

2005இல் அப்போதைய பிரதமர் ஏரியல் ஷாரோன், காசா, மேற்குக் கரையின் மேற்கே இருந்த அனைத்து இஸ்ரேலிய குடியேற்றங்களையும் கலைக்க உத்தரவிட்டார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. யூத மதத் தலைவர்கள், புனித நிலத்தில் உள்ள குடியேற்றங்களை அழிப்பது ஆன்மிகத் துரோகம் என்றும் விமர்சித்தனர்.

### காசாவை முழுமையாக கைப்பற்ற திட்டம்:

தற்போதைய போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நேதன்யாகுவின் ஐந்து கொள்கைகளுக்கு பாதுகாப்பு அமைச்சரவை 8/8/25இல் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, அனைத்து பணயக்கைதிகளையும் திரும்பப் பெறுதல், ஹமாஸை நிராயுதபாணியாக்குதல், காசா பகுதியை இஸ்ரேல் கட்டுப்படுத்துதல், மாற்று சிவில் அரசாங்கத்தை உருவாக்குதல் மற்றும் இராணுவமயமாக்கலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே காசாவின் 75 சதவீதத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இஸ்ரேலிய இராணுவம், பணயக்கைதிகள் வைக்கப்பட்டுள்ளதாக உளவுத்துறை அறிக்கைகள் சுட்டிக்காட்டும் பகுதிகள் உட்பட காசவில் மீதமுள்ள பகுதிகளைக் கைப்பற்றத் தயாராகி வருகிறது.

இஸரேலின் பாதுகாப்பை வலுப்படுத்தவும், ஹமாஸை முற்றிலுமாக ஒழிக்கவும், அங்குள்ள மக்களுக்கு சுதந்திரம் வழங்கவும் காசா முழுவதையும் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் எடுக்க விரும்புகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் காசாவை நிரந்தரமாக வைத்திருக்க அவர்கள் விரும்பவில்லை என்றும், அங்கு ஒரு பாதுகாப்பு மண்டலத்தை நிறுவி, அதை முறையாக நிர்வகிக்கக்கூடிய அரபுப் படைகளிடம் நிர்வாகப் பொறுப்புகளை ஒப்படைப்போம் என்றும் நேதன்யாகு விளக்கினார்.

### இஸ்ரேலின் உண்மையான நோக்கம்:

போருக்குப் பின்னால் உள்ள இஸ்ரேலின் உண்மையான நோக்கங்கள் இப்போது வெளிப்பட்டுள்ளதாக ஹமாஸ் கூறியுள்ளது.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ‘இஸ்ரேல் காட்ஸ்’ போரின் அனைத்து இலக்குகளும் எட்டப்படும் வரை ராணுவம், அரசின் முடிவுகளுக்கு உடன்பட வேண்டியது ராணுவத்தின் கடமை என்றும் தெரிவித்திருந்தார்.

பெஞ்சமின் நெதன்யாகுவின் இந்த முடிவில் இஸ்ரேல் ராணுவமே முழுமையாக உடன்படவில்லை என்ற தகவல்களும் வெளியாகி வருகின்றன.

### டொனால்டு டிரம்ப் நிலைப்பாடு:

காசாவில் இஸ்ரேல் நடத்தும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக முயற்சிப்பதாக கூறி வரும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

காசாவை இஸ்ரேல் முழுமையாகக் கைப்பற்றுவதை ஆதரிப்பீர்களா? என்ற கேள்வி முன்வைக்கப்பட, அது முழுக்க முழுக்க இஸ்ரேலை சார்ந்தது, என்று பட்டும் படாமலும் சொல்லியிருக்கிறார்.

உண்மையைச் சொல்வதென்றால், போரை நிறுத்துவேன் என்று முழங்கும் டிரம்ப், இதுவரை வெளிப்படையாக இஸ்ரேலுக்கு எவ்வித அழுத்தமும், நெருக்கடியும் கொடுக்கவில்லை என்பதே நிதர்சனம்.

### இஸ்ரேலிய மக்கள் எதிர்ப்பு:

காசாவில் யூதர்களை மீள்குடியேற்றம் செய்ய, இஸ்ரேலிய மக்களில் பெரும்பாலானோரின் எதிர்பார்ப்பாக அது இல்லை. காசாவில் சிக்கியுள்ள பிணைக் கைதிகள் இன்னும் உயிருடன் இருக்கலாம். அவர்களை மீட்பதைத்தான் பிரதமர் செய்ய வேண்டுமே தவிர ஹமாஸை எரிச்சலூட்டும் இதுபோன்ற நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

ஆயினும் இஸ்ரேலிய மக்களில் ஒரு சிலர், காசாவுக்குள் மீள்குடியேற விரும்புகின்றனர். யூத மதம் சார்ந்த நம்பிக்கைகள், அரசியல் நிலைப்பாடுகள் என பல காரணங்களால் உந்தப்பட்ட அவர்கள் நெதன்யாகுவின் முடிவை ஆதரிக்கின்றனர்.

### ஐ.நா. சபை எச்சரிக்கை:

இஸ்ரேலின் புதிய திட்டத்திற்கு, பல நாடுகளின் கண்டனங்களையும், ஏன் இஸ்ரேல் ராணுவத் தலைமைத்துவத்தின் சில எதிர்ப்புகளையும் புறக்கணித்து எடுக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல்-காசா மோதல் மேலும் தீவிரமடையும் என சர்வதேச சமூகத்தில் அச்சம் நிலவுகிறது.

இது குறித்து இஸ்ரேலின் ராணுவ துணைத் தலைவர் ஈயல் ஸமீர், இது பெரிய உயிரிழப்புகளையும், மனிதநேயம் சார்ந்த பாதிப்புகளையும் ஏற்படுத்தக்கூடும் என எச்சரித்தார். அவரின் அபிப்பிராயம் பாதுகாப்புக் குழுவில் புறக்கணிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையால் காசா நகரில் உள்ள சுமார் ஒரு மில்லியன் மக்களை இடம்பெயரச் செய்யும் அபாயம் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. காசாவை முழுமையாக இஸ்ரேல் ஆக்கிரமிப்பது பேரழிவுக்கு வழிவகுக்கும் என ஐ.நா. சபை எச்சரித்துள்ளது.

இஸ்ரேலின் நடவடிக்கை சர்வதேச சட்டங்களுக்கு முரணானது என்றும், மத்திய கிழக்கில் பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் என்றும் ஐ.நா.சபையின் செய்தி தொடர்பாளர் Farhan Haq தெரிவித்துள்ளார்.



வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57




JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna




புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT




Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

## ஊழல்வாதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து ஒருவருடம் நிறைவடைந்துள்ளது. இந்த ஒருவருட காலத்தில் பிரதான ஊழல்வாதிகள் மற்றும் குற்றவாளிகள் சட்டத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். சட்டம் அனைவருக்கும் பொதுவானது என்பதுதற்போதுஉறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஊழல்வாதிகளை சட்டத்தின்படி கைது செய்யும்போது எதிர்க்கட்சியினர் அனைவரும் அச்சமடைந்து தற்போது ஒன்றிணைந்துள்ளார்கள். தேர்தல் காலத்தில் ஒருவரை ஒருவர் திருடர் என்று விமர்சித்துக்கொண்டோம் என்று குறிப்பிடுகிறார்கள். இவர்களின் உண்மை முகத்தை மக்கள் நன்கு விளங்கிக்கொள்ளவேண்டும்.

சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான ஆவணங்களை நாங்கள்தான் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை தொடர்பான ஆணைக்குழுவுக்குசமர்;ப்பித்தோம். இதில் ஏதேனும்பிரச்சினைகள்காணப்படுமாயின் ஆணைக்குழுவில்முறைப்பாடளிக்கலாம்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் --- ராஜபக்சவின் ஆளும்தரப்பில் ஊழல் எதிர்ப்புச் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் இந்தச் சட்டத்துக்கு உரிய அதிகாரங்கள் ஏதும் வழங்கப்படவில்லை. சட்டத்தை இயற்றி அதனைப் பெட்டகத்தில் போட்டு வைத்தார்கள்.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்துக்கு எமது ஆளும்தரப்புதான் உயிர்கொடுத்தது. சட்டத்துக்கு உரிய ஒழுங்குவிதிகளை உருவாக்கினோம். இந்தச் சட்டத்தின் பிரகாரம் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு தற்போது செயற்படுகிறது. இதனால்தான் ஊழல்வாதிகள் அச்சமடைந்துள்ளார்கள். எம் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு சட்டத்தின் ஊடாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

## வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் வலியுறுத்து

தமிழ் மக்களின் இருப்பை உறுதி செய்யும் மாகாணசபைமுறைமையைநடைமுறைப்படுத்த தேர்தலை விரைவாக நடத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

'வன் டெக்ஸ்ட் இன்னிஷியேற்றி'வின் ஏற்பாட்டில் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் வடமாகாண சபையில் கடந்தகால அனுபவங்கள் மற்றும் மாகாண சபைக்கான தேர்தலை வலியுறுத்தும் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இந்தக்கலந்துரையாடலில் வடமாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் தவராசா, முன்னாள் அமைச்சர்களான குருகுலராஜா, சர்வேஸ்வரன், உறுப்பினர்களான குகதாஸ், சயந்தன், கஜதீபன், ஆர்னோல்ட், சுகிர்தன், தவநாதன், கமலேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தக்கலந்துரையாடலின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது தேர்தல் உடனடியாக நடக்கவேண்டும் என்று வலியுறுத்தினர்.

இந்தச் செய்தியாளர்கள் சந்திப்பில் இம்மானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையில் நடைபெற்ற கடந்த காலச் செயற்பாடுகள் சம்பந்தமாக ஆராயும் சந்திப்பு ஆக்கபூர்வமானமாக இருந்தது. இதன்போது முக்கிய விடயமாக மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்ந்தும் காலதாமதப்படுத்தப்படுவதுதொடர்பில்அவதானம் செலுத்தப்பட்டது. அத்துடன், மாகாண சபையை வினைத்திறனுடன் கொண்டு செல்வதற்கான ஏதுநிலைகளை குறித்து அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த நிலையில் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தன.

அந்த வகையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாகிய நாங்கள், தமிழ் மக்களுக்கு கிடைத்த இரண்டாவது அரசியல் தளமாகவே மாகாண சபையைக் கருதுகின்றோம். அந்த வகையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை தாமதமின்றி முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் என்றார்.

ரெலோவின் சார்பில் கருத்து வெளியிட்ட சபா குகதாஸ் தெரிவிக்கையில், தற்போதைய ஜே.வி.பி தலைமையிலான ஆளும்தரப்பு மாகாண சபை முறைமையை விரும்பாத ஒன்றாகவே பார்க்கின்றது. கடந்த காலங்களில் இந்த ஆளும்தரப்பு நிலைப்பாடு மாகாணசபை முறைமைக்கு முழுமையாக எதிரானதாகவே இருந்தது. குறிப்பாக கொள்கை ரீதியாக எதிராகவே செயற்பட்டது.

அவ்வாறான நிலையில் தற்போது எல்லை மீள்நிர்ணயத்தினை காரணம் காண்பித்து தேர்தலை தாமதப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள். குறிப்பாக தேர்தலை பழையமுறையிலாபுதியமுறையிலாநடத்துவதுஎன்றவிவாதத்தையும் கையிலெடுத்து காலம் தாழ்த்துவதையே இலக்காகக் கொண்டு வருகின்றார்கள்.

புதியமுறைமையில்தேர்தலைநடத்துவதென்றால்எல்லைநிர்ணய முறைமையில்ஏற்பட்ட குறைபாடுகள்சீர்செய்யப்படவேண்டியுள்ளன. இல்லையேல் தேர்தல் நடைபெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. ஆகவேதான்பழைய முறையில்தேர்தலைநடத்துவதே இலகுவானது. அதற்கான தனிநபர் பிரேரணை சமர்பிப்பிக்கப்பட்டுள்ள நிலையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றார்.

ஈ.பி.டி.பி.யின் பிரதிநிதியான தவநான் தெரிவிக்கையில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கோரிக்கையின் முழுமையான வடிவமாக இல்லாது விட்டாலும் மாகாணசபை முறைமை இனப்பிரச்சினைக்கானதீர்வின்ஆரம்பமாகஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எமது கட்சி, மாகாண சபை முறைமையை தொடர்ச்சியாக வலியுத்தி வருகின்றவொரு தரப்பாகவே உள்ளது. ஆகவே தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தேர்தலை தாமமின்றி நடத்த வேண்டும். அதில் அக்கறை காட்டாது இருக்க முடியாது என்றார்.

புளொட் சார்பில் கலந்து கொண்ட கஜதீபன் தெரிவிக்கையில், தமிழ் மக்களைப்பொறுத்தவரையில்நீண்டகாலமாகஇனப்பிரச்சினைக்கான தீர்வை சமஷ்டி முறைமையில் கோரி வருகின்றார்கள். அவர்கள் மாகாண சபை முறைமையை தமக்கான தீர்வாக கருதவில்லை. தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ்த் தேசிய இனத்தின் தீர்வான மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொள்ளவில்லை.

இருப்பினும், முதற்கட்டமாகஅரசமைப்புரீதியாகமேற்கொள்ளப்பட்ட அரசமைப்பு செயற்பாட்டுத் தளமாக இருப்பது மாகாண சபை முறைமைதான். ஆகவே மாகாண சபைகளுக்கான மக்கள் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமானதாகும் - என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எப்.சார்பில் கலந்து கொண்ட முன்னாள் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கு மாகாண சபை முறைமையானது, அவர்களது இருப்புடன் தொடர்புடைய விடயமாகும். ஆனால் ஏனைய மாகாணங்களுக்கு அவ்விதமான நிலைமைகள் இல்லாது இருக்கலாம்.

அநுர ஆளும்தரப்பு தேர்தலை நடத்த விரும்மாவிட்டால் குறைந்தபட்சம் வடக்கு கிழக்கிலாவது தேர்தலை நடத்த வேண்டும்.

இதை அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த குரலில் வலியுறுத்துகின்றோம். சர்வதேச சமூகம் என்று எமது அரசியல் உரிமை குறித்துப் பேசுகின்றது. இந்திய ஆளும்தரப்பும் மாகாண சபை முறைமையையே ஐ.நாவில் வலியுறுத்துகின்றது.

குறிப்பாக ஐ.நாவின் தற்காலிக வரைபில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அர்த்தமுள்ள வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனால் இவ்விடயம் தற்போது சர்வதேச தளத்தில் எழுந்துள்ள குரலாகவே இருக்கின்றது. அதனால் மகாணசபை முறைமை நீக்கப்படாது இருப்ப அவசியமாகும். மேலும் புதிய அரசமைப்புச் செயற்பாடுகளின் ஊடாக, மாகாண சபை முறைமை நீக்கப்பட்டால் இந்தியாவுடன் இலங்கை நேரடியாக மோதும் நிலைமையையே உருவாக்கும். அதனால் மாகணசபை முறைமையை நீக்க அரசு முயலாது என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2025இல் வெளியிடப்பெற்றது